# தேசிய கல்வி நிறுவகம் - மஹரகம

## பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி (முழு நேரம்) - 2022/ 2023

**தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பாடநெறியின் காலம்** : ஒரு வருடம் - முழு நேரம்

**பாடநெறியின் தன்மை** : மூன்று தவணைகளை (Terms) கொண்ட நிகழ்நிலை மூலமான கல்விசார் செயலொழுங்குகள் நடைபெறும்.

**பாடநெறி நடைபெறும் இடம்** : தொழில்வாண்மைவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க

**பாடநெறியின் மொழிமூலம்** : சிங்களம் / தமிழ்

**கட்டண விபரங்கள்**

விண்ணப்பக் கட்டணம் : ரூபா 1,500/-

பதிவுக் கட்டணம் : ரூபா 2,000/-

பாடநெறிக் கட்டணம் : ரூபா 80,000/- (சமமான இரண்டு தவணைகளில் கட்டணத்தைச் செலுத்த முடியும்)

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் -**

விண்ணப்ப முடிவு திகதியன்று கீழ்வரும் சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1. இலங்கை கல்வி நிர்வாக சேவை / இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை/ இலங்கை அதிபர் சேவை அல்லது அரச நிறுவனமொன்றின் அல்லது பிரிவெனாவொன்றின் தலைவர் அல்லது அரைகுறை அந்தஸ்துள்ள அரச கல்வித் தாபனமொன்றின் தலைவராக இருத்தல்.
   மற்றும்
2. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் / கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கல்விமாணிப் பட்டம்.
   அல்லது
   (ஆ) வேறு பட்டங்களுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா / ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் / கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் போன்ற தொழிற்றகைமைகளில் ஒன்று இருத்தல்.
3. நான்கு வருட கற்பித்தல் அனுபவமும் அதில் இரண்டு வருடங்களேனும் நிர்வாக மற்றும் மேற்பார்வை பணிகளில் ஈடுபட்டிருத்தல். (நிர்வாகம் மற்றும் மேற்பார்வை கடமைகளில் அனுபவமிருத்தலை உறுதி செய்வதற்கு நேர்முகப் பரீட்சையின் போது வலயக் கல்விப் பணிப்பாளர்/ திணைக்களத் தலைவர் வழங்கிய கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)
4. இப்பாடநெறியில் கலந்துகொள்ளும் காலப்பகுதியில் (2022) தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்த ஒரு பாட நெறியிலோ அல்லது வேறு உயர்கல்வி நிறுவனங்களிலோ நடாத்தப்படும் எந்த ஒரு பாடநெறியிலும் முழுநேர / பகுதி நேர பங்குபற்றுனராக இல்லாதிருத்தல்.

**பாடநெறிக்காக தெரிவு செய்யப்படல்**

தொழில்வாண்மைவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறையினால் நடத்தப்படும் நிகழ்நிலை ஊடாக நேர்முக தேர்வுக்கு சகல விண்ணப்பதாரிகளும் உட்படுத்தப்பட்டு பாடநெறிக்கானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறைகள்**

1. தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறை இணையத்தளத்தில் (https://www.exams.nie.lk/intakes/new) பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. **விண்ணப்பத்தை பூர்த்திசெய்யும் முறை**
   (https://www.exams.nie.lk/intakes/new) இணையத்தளத்தில் பிரவேசித்து Postgraduate Diploma in Educational Management (Full Time) பாடநெறியுடன் தொடர்பான Advertisement ஐ தேர்ந்தெடுத்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்படவும்.

2.1 (https://www.exams.nie.lk/intakes/new) எனும் இணையத்தளத்தில் பிரவேசித்து (Sign up) குறித்த விபரங்களைக் கொண்டு நிரப்புக. அதில் உங்களுக்கு கிடைக்கும் பயன்படுத்துபவர் இலக்கத்தை

(User ID) பெற்றுக் கொள்க. எதிர்கால பயன்பாட்டுக்காக பயன்படுத்துபவர் இலக்கத்தையும் (User ID) கடவுச் சொல்லையும் (Password) குறித்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்.

2.2 இணையத்தளத்தின் வலது பக்கத்தின் கீழ்ப் பகுதியில் பயன்படுத்துபவர் இலக்கத்தையும் (User ID) கடவுச் சொல்லையும் (Password) பயன்படுத்தி பிரவேசிக்கவும் (Login)

2.3 உங்கள் சுயவிபரங்கள் பற்றிய விபரங்களை (User Profile) இற்றைப்படுத்துக (Update)

- தனிப்பட்டத் தகவல்கள்
- சேவைத் தகவல்கள்
- கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

2.4 அதற்கடுத்ததாக புதிய அனுமதி (New Enrolement) க்குள் நுழையவும்

2.5 அதற்கடுத்ததாக உங்களது பாடநெறிக்குரிய விண்ணப்ப படிவத்துக்குள் பிரவேசிக்கவும். (My Application)

2.6 விண்ணப்ப படிவத்தில் உள்ளடக்கிய விடயங்கள் யாவும் சரியானதா என பரிசீலிக்கவும். கட்டம் 2 இல் கொடுப்பனவுக்கான (Step 2 - Payment) பகுதியில் உள்நுழைக. அவற்றில் வங்கியில் பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப உங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு செய்தலுக்கான உசாவு இலக்கத்தைப் (Payment Reference Number) பெற்றுக்கொள்க. பின்னர் வங்கியில் பண வைப்புச் சீட்டில் கொடுப்பனவு செய்தலுக்கான உசாவு இலக்கத்தையும் (Payment Reference Number) ஏனைய தகவல்களையும் குறிப்பிட்டு வங்கியில் விண்ணப்ப கட்டணத்தை வைப்புச் செய்க.

2.7 பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டை ஸ்கேன் செய்து திகதி மற்றும் பணப்பரிமாற்ற உசாவுகை இலக்கத்தை (Transaction Reference Number) உட்சேர்க்கவும்.

2.8 உங்களுக்கு கிடைக்கும் விண்ணப்பபத்திர உசாவுகை இலக்கத்தை (Application Reference Number) குறித்து வைத்துக்கொள்க.

3.0 விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கவும் (Download Application)

நிகழ்நிலை விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்த பிறகு. விண்ணப்படிவத்தின் பிரதியை உங்கள் உசாவுகை எண்ணுடன் (Reference Number) அச்சிட்டு நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி பற்றுச்சீட்டு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கீழ்வரும் ஆவணங்களுடன் **பணிப்பாளர், தொழில்வாண்மைவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க (The Director, Department of Professional Development and Educational Management, Faculty of Educational Leadership Development and Management, National Institute of Education, Meepe Junction, Padukka)** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அஞ்சல் செய்யப்படல் வேண்டும்.

1. முதல் பட்ட சான்றிதழ்
2. பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ்/ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்/ கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ்
3. நியமன கடிதம்
4. சேவைச் சான்றிதழ்

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் **‘‘ PGDEM Full Time 2022/ 2023 – (Sinhala/ Tamil/ English)’’** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.0 மேலதிக விபரங்களுக்கு சிங்கள மொழி மூலமாயின் 0704839203 என்ற இலக்கத்திற்கும் தமிழ் மொழி மூலமாயின் 0774028469/ 0779697879 ஆகிய இலக்கங்களுக்கும் ஆங்கில மொழி மூலமாயின் 0705381470 என்ற இலக்கத்திற்கும் தொழிநுட்ப உதவிகளாயின் 0117601777/ 0117601776 ஆகிய இலக்கங்களுக்கும் வார நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் 4.00 மணி வரையிலான கால எல்லையில் தொடர்புகொள்ளவும்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.04.30**

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**Reference Number: ---------------------**

Name with Initials ----------------------------------------------------------------------------------------------
Official Address ----------------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------
Private Address ----------------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------

I certify that the attached particulars are true and correct. I also declare that I am not following a full time/part-time course at the National Institute of Education or in any other higher education institution.

Date: ---------------------

------------------------------
Signature of the applicant

**<u>Recommendation of the head of the institute</u>**

I certify that Rev./ Mr./Ms/Mrs/ --------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------
is currently employed in ------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------ Vidyalaya/Zonal Educational office and that the person **can be released/cannot be released** from duties for the full-time study program for one year in the event of being selected to follow the Postgraduate Diploma in Educational Management at NIE in 2022. Above provided details are true and correct.

Date: -----------------------

-----------------------
Name and Signature
SEAL

If not recommending the application, please state reasons below:
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………

Name of Institution: ------------------------------------------------------------------------------------------
Address : -------------------------------------------------------------------------------------------
Contact No : -----------------------------------------